**மாத்தறை பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தறை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஓர் வண்டியின் பெறுமதி ரூபா 2,490,398 அதிகரித்தும், இன்னும் இரண்டு வண்டிகளின் ரூபா 7,316,537 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் 3 வருட காலத்தை விஞ்சிய பெறப்படவேண்டிய 11 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 59,884,738 ஆனதுடன் 3 வருட காலத்தை விஞ்சிய செலுத்தவேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,710,415 ஆனது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் மாத்தறை மாநகர சபையினால் கூட்டுத்தொகை ரூபா 1,942,225 அறவிடப்பட வேண்டியதாகக் காட்டப்பட்ட போதிலும், மாத்தறை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான மீதியொன்று காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 44,017 ஆன முத்திரை வரி, ரூபா 229,380 ஆன பெறுமதி சேர்வு வரி மற்றும் ரூபா 45,338 ஆன தேசத்தை கட்டியெழுப்பும் வரி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 58,226,232 ஆன காணி தொடர்பான உரித்துரிதியும் சுவீகரிப்பு பதிவேடும் , ரூபா 21,981,649 ஆன வேலை கடன்பட்டோர் மற்றும் ரூபா 22,452,139 ஆன கடன்கொடுத்தோர் தொடர்பான பட்டோலை, கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும், ரூபா 23,592,358 ஆன நிலுவையான மூலதன உதவி மற்றும் ரூபா 7,931,031 ஆன நிலுவையான வருமான உதவி தொடர்பான உதவி பதிவேடு மற்றும் விபரமான

பட்டோலையும், ரூபா 2,714,653 ஆன செலவினம் தொடர்பான 15 மோட்டார் வண்டிகளுக்கான தின ஓட்டக்குறிப்பு மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு சமர்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக பரிசீலனை செய்யப்பட முடியாமல் இருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானம் 261(3) க்கு இணங்காமை காசு பதிவேட்டில் மீதியொன்று இல்லாமை கூட்டுத்தொகை ரூபா 264,583 ஆன காசோலையொன்று பிரப்பிக்கப்பட்டடிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,096,340 ஆன போதிலும், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,009,842 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதி விளைவில் ரூபா 12,086,498 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 4,677,092 ஆன மூலதன உதவி அளவை விஞ்சி ரூபா 2,356,982 ஆன மூலதன செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவுகளில் 9.5 சதவீதம் குறைவு காட்டப்பட்ட போதிலும், மொத்த மீண்டுவரும் வருமானத்தின் மொத்த மீண்டுவரும் செலவினம் 67 சதவீதம் அளவு உயர் தரத்தில் நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மீண்டு வரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 73,238,787 | 36,189,968 | 37,048,819 | 49,142,448 | 12,093,629 |
| 2014 | 52,273,818 | 21,774,125 | 30,499,693 | 40,263,976 | 9,764,283 |
| 2013 | 38,365,975 | 18,812,585 | 19,553,390 | 40,787,313 | 21,233,923 |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வருமான உதவிகளில் மற்றும் சுய சம்பாதிப்பு வருமானத்தில் வளர்ச்சியொன்று காட்டப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவும் கனிசமான அளவில் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டில் போன்று முன்னைய ஆண்டிலும் வருமான உதவி கிடைக்காவிடின் சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ள முடியாத நிலைமை காட்டப்படுகிறது.

### 2.3 செயற்பாட்டு மூலதன முகாமை

மீளாய்வாண்டில் நடைமுறை மற்றும் உடன் விகிதம் திருப்திகரமான நிலைமையைக் காட்டிய போதும், கடன்பட்டோர் மீதியில் மூன்று ஆண்டுகளை விஞ்சி அறவிடப்படாது உள்ள ரூபா 59,884,738 ஆன மீதிகள் காணப்படுவதனால் நடைமுறை விகிதம் பிரகாரம் திரவத்தன்மை நிலைமையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

2015 திசெம்பர் 31 க்கு சபையின் 05 வருமான விடயங்களின் கீழ் மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்டிருந்த ரூபா 10,077,185 ஆன மொத்த மீண்டுவரும் வருமானத்தின் ரூபா 4,570,216 மாத்திரம் சேகரித்திருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலின் 45 சதவீத முன்னேற்றம் ஆனது.

### 2.4.2 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதியின் 43 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 58 சதவீதம் மாத்திரம் அறவிடபட்டதனால் இறுதி நிலுவை ரூபா 2,446,730 அளவு உயர் பெருமானத்தை கொண்டிருந்தது. நிலுவை வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவையின் 07 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 59 சதவீதம் மாத்திரம் அறவிடபட்டதனால் ஏக்கர் வரி அறவிடல் திருப்திகரமான நிலையில் இருக்கவில்லை.

### 2.4.4 வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால் ஆரம்ப நிலுவை மீதியின் 46 சதவீதம் மாத்திரம் அறவிடபட்டிருந்தது.

### 2.4.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 4,546,400 வும் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 20,000,000 வும் பெறப்பட வேண்டியதாக இருந்தது.

### 2.4.6 கடைஅறை வாடகை

சுவர்னபுர இருந்த கடைஅறைகள் 2005 வருடத்தில் அகற்றும் போது ரூபா 184,024 ஆன நிலுவை வாடகை மீதி நிலவிய போதிலும், முறையான ஒப்பந்தங்களில் ஈடுபடாததனால் நிலுவை மீதி அறவிடலுக்கு நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்பட்டன. இம் மீதிகளின் ரூபா 116,313 அறவிடலுக்கு மாத்தறை மாவட்ட நீதிமன்ற உத்தரவொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அப் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான நடைமுறைக் கணக்குகள் தொடர்பான காசுப் புத்தகம் பிரகாரம் ரூபா 12,152,061 ஆன சாதாரண மாதாந்த மீதி நிலவியதுடன் அப்பணத்தை முதலீடு செய்து மேலதிக வட்டி வருமானத்தை சம்பாதித்துக் கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் நீர் விநியோகக் கணக்கு தொடர்பான வங்கியிணக்கக்கூற்றில் காட்டப்படும் ரூபா 80,667 ஆன மேலதிக வைப்பு மற்றும் ரூபா 600,819 ஆன கொடுப்பணவிற்கு சமர்ப்பிக்கப்படாத நான்கு காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ‘‘ஊரிற்கு ஊர் வாயிலிற்கு வாயில்’’ கருத்திட்டத்தின் ஒதுக்கீட்டுப் பணம் சபைக்கு கிடைக்க முன் வேலை ஆரம்பிக்கப்பட்டு சபை நிதியத்தினால் ரூபா 3,570,187 செலவு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையும் இச்செலவினம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் பெறாமல் கூட்டுத்தொகை ரூபா 2,500,000 ஆன நிலையான வைப்புக்கள், காலவதியாவதற்கு முன் பணமாக்கப்பட்டு, அப் பணம் சபையினால் சேகரிக்கும் இரண்டு நடைமுறை கணக்குகளில் வைப்பு செய்ததன் காரணமாக ஈட்டிக்கொள்ளக்கூடியதாகயிருந்த ரூபா 728,100 ஆன வட்டி வருமானம் சபைனால் இழக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டிருந்த 192 வேலை முன்மொழிவுகளுக்காக பாதீட்டினால் ரூபா 145,600,000 ஆன மதிப்பீட்டு ஒதுக்கீடு ஏற்படுத்தி கொள்ளப்பட்டிருந்த போதும் அவற்றில் எந்தவொரு முன்மொழிவுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்த போதும் சபை நிதியத்திலிருந்து ரூபா 279,777 செலவிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்காத 06 வேலை முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கப்பட்ட 08 செலவின விடயங்களில் ரூபா 175,875,362 ஆன சேமிப்பு ஆனது. ஏனைய செலவின விடயமொன்றின் எல்லை விஞ்சிய ரூபா 2,798,183 ஆன செலவினம் செய்திருந்த போதிலும், 07 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்ப்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 144,367,075 ஆனது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2005 நவம்பர் 08 திகதி இலக்கம் 03 கொண்ட உள்ளூராட்சி புனர்நிர்மாண சுற்றிக்கையில் 08 ஆம் பந்தி பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2000 மார்ச் 15 ஆம் திகதி பீஎன்/பீஈ/பீ.7 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையை மேற்கோள் காட்டி 2004 திசெம்பர் 22 திகதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள மார/வாச/வி/க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்பட்டிருக்கவில்லை.

## 4.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

முன்னைய ஆண்டிற்கு தொடர்பாக கணிப்பிட முடியுமான பெறுமதி ரூபா 3,448,462 ஆன இரண்டு ஐயவினாகள் தொடர்பான சரிசெய்தல் மீளாய்வாண்டிலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) நிதி கட்டுப்பாடு.

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு.

(ஈ) வருமான நிருவாகம்.

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்.